மே 12

மனன வசனம்

**கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். மத்தேயு 24:24.**

ஆராய்ச்சிக்கு

*மத்தேயு 24:1-25; வெளி 13:11-17; மத்தேயு 7:24-27; லூக்கா 21:20; மத்தேயு 25:1-30.*

மே 12 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## பாடம் 7

# மத்தேயு 24உம் 25உம்



கடைசிக்காலத்தைப்பற்றிய முக்கிய சத்தியங்களையும், கடைசிக்காலத்திற்காக எவ்வாறு ஆயத்தப்படலாம் என்பதையும் மத்தேயு 24, 25 அதிகாரங்களில் இயேசு சொல்கிறார். கடைசிக்காலங்கள் குறித்து இந்த அதிகாரங்களில் இயேசு போதித்திருக்கிறார். அதே நேரம், அப்போது உடனே நிகழவிருந்த எருசலேமின் அழிவையும் மனதில் வைத்துப் பேசினார்; இஸ்ரவேலரின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க பேரழிவாக அது விளங்கியிருந்தது.

இயேசு தம் சீடர்களிடம் பேசிய வார்த்தைகள், வரவிருந்த தலைமுறைகளைச் சேர்ந்த அவருடைய பிள்ளைகளுக்கும் பொருந்தும்; அவர் வரும்போது உயிரோடு இருப்பவர்களுக்கும் பொருந்தும். இயேசு சொல்லும் விஷயங்கள் சுவாராசியமான சம்பவங்கள் அல்ல. இந்த உலகத்திற்கும் அவருடைய சபைக்கும் என்னவெல்லாம் காத்திருக்கின்றதாம்? யுத்தங்கள், யுத்தங்களின் செய்திகள், கொள்ளைநோய்கள், கள்ளக்கிறிஸ்துகள், உபத்திரவம் ஆகியவையே. வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால், இயேசு சொன்னது போலவே எல்லாம் நடந்திருப்பது புரியும். எனவே, நம்முடைய நாட்களில் இன்னும் நிறைவேறாமல் இருக்கும் விஷயங்கள் அவர் சொன்னபடியே நிச்சயம் நிறைவேறும் என்று நாம் நம்பலாம்.

என்ன நிகழவிருந்தது என்பதுபற்றி மாத்திரம் இயேசு எச்சரித்திருக்கவில்லை. ‘மனுஷகுமாரன்’ திரும்ப வரும்போது, அவர் பிள்ளைகள் ஆயத்தமாக இருப்பதற்கான உவமைகளையும் அவர் சொல்லியிருக்கிறார்; அவை சொல்லும் செய்திக்கு நாம் செவிகொடுக்கவேண்டும். ஆம், இக்கட்டான காலங்கள் வரலாம். ஆனால், அவர் திரும்பவரும்போது அவருக்காகக் காத்திருக்கிற மக்களை அவர் ஆயத்தப்படுத்துவார்.

*2018, மே 19 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு, மே 13

## மிகச்சரியாக நிறைவேறி வரும் தீர்க்கதரிசனம்

இன்னும் சில நாட்களில் இயேசு சிலுவையில் அறையப்பட இருந்தநிலையில், ஒலிவ மலைமேல் அவருடைய சீடர்கள் அவரிடம் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது, எருசலேம் தேவாலயம் அழிக்கப்படுமென்று இயேசு சொன்னார்; சீடர்களுக்கு எப்படி இருந்திருக்கும்? என்ன யோசித்தார்களோ தெரியவில்லை; ஆனால், தேவாலயத்தின் அழிவை 'உலகத்தின் முடிவுக்கு' அடையாளமாக அவர்கள் கருதியது தெரிகிறது. மத் 24:3.

**கடைசி நாட்கள்குறித்து இயேசு தம் சீடர்களுக்குச் சொன்ன முக்கிய விஷயங்கள் என்ன? மத்தேயு 24:1–25.**

மத்தேயு 24:1-25இல் பல விஷயங்கள்பற்றி இயேசு கூறுகிறார்; ஆனால் காலங்கள் நெடுகிலும், இறுதி நாட்கள் மட்டும் தம் பிள்ளைகள் வஞ்சகக் குழப்பத்திற்கு ஆளாவார்களென கிறிஸ்து வருந்தினார். கள்ளக்கிறிஸ்துகளும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் மக்களை வஞ்சிப்பார்கள். சிலர் தாங்கள் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக வந்திருப்பதாகச் சொல்வார்கள்; சிலர் தங்களையே கிறிஸ்துவெனச் சொல்வார்கள். இதில் வேதனை என்ன தெரியுமா? பலர் அதை நம்பவும் செய்வார்கள்.

தேவனுடைய வார்த்தை மிகச்சரியாக நிறைவேறியிருப்பதை நாம் கண்டு, வருந்தியிருக்கலாம். வரலாற்றிலும் நம் நாட்களிலும் வஞ்சகர்கள் வந்து, 'நானே கிறிஸ்து' என்கிறார்கள். எவ்வளவு சரியாக கிறிஸ்து தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார்! இக்காலத்தில் வாழ்கிற நாம், கடந்துபோன நூற்றாண்டுகளைத் திரும்பிப் பார்த்து, இயேசு முன்னுரைத்தது மிகச்சரியாக நிறைவேறியிருப்பதைக் காண முடிகிறது. ஆனால், கிறிஸ்துவின் நாட்களில் வாழ்ந்தவர்கள் இப்படியெல்லாம் கண்டிருக்கமுடியாது. இறுதி நாட்களை நெருங்கநெருங்க, இப்படிப்பட்ட வஞ்சகங்கள் அதிகரிக்கவே செய்யும்.

உலகத்தின் நிலைபற்றி இயேசு முன்னுரைத்திருப்பதை கவனித்தாலே நம் விசுவாசத்தைப் பெலப்படுத்தலாம். கிறிஸ்துவுக்குப் பிறகு உலக வரலாற்றின் பல்வேறு காலக்கட்டங்களில், மக்கள் பல விஷயங்களில் நம்பிக்கை வைத்து, அவை மனிதர்களின் உபத்திரவங்களையும் பாடுகளையும் நீக்கிவிடும் என்று நம்பியிருக்கிறார்கள். அரசியல் இயக்கங்கள், தொழில்நுட்பம், அறிவியல், பகுத்தறிவு போன்றவற்றில் மக்கள் நம்பிக்கைவைத்து, இவ்வுலகை கனவுலகாக மாற்றப்போவதாக நினைத்திருக்கிறார்கள். ஆனால், இந்த எதிர்பார்ப்புகள் எல்லாமே தவிடுபொடியானதை வேதனையான வரலாற்று நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் காட்டியிருக்கின்றன. இவ்வுலகம்பற்றி இயேசு சொன்னபடியேதான் இன்று நிலைமை உள்ளது. கிட்டத்தட்ட இரண்டாயிரம் வருடங்களுக்குமுன்பு இயேசு சொன்னவை, அந்த எதிர்பார்ப்புகள் அர்த்தமற்றவை என்பதைக் காட்டுகின்றன.

மத் 24:25 சொல்கிற என்ன விஷயம், நாம் விசுவாசத்தில் பெலப்படும்படிக்கு நமக்கு மிகவும் உதவியாக இருக்கும்?

**திங்கள், மே 14**

## கடைசிமட்டும் நிலைத்திருத்தல்

**மத்தேயு 24:9-ல் இயேசு சொல்வதையும், வெளி 13:11-17இல் அவரது ஏவுதலால் யோவான் எழுதி வைத்திருப்பதையும் வாசித்தால், என்ன ஒற்றுமை களைக் காணமுடிகிறது?**

கடைசிக்காலத்தில் வாழ்கிற தம் மக்கள்மேல் அக்கறையுள்ளவராக, உலகம் முழுவதிலும் எழும்பும் ஒரு வஞ்சகம்பற்றியும் கிறிஸ்து சொல்கிறார்; அது விசுவாசிகளின் விசுவாசத்தை எதிர்க்கிற, பொய்தொழுகை செய்ய மக்களைக் கட்டாயப்படுத்துகிற வஞ்சகமாகும். விசுவாசத்தில் உறுதியாக நிற்பவர்கள்வெறுப்பையும்உபத்திரவத்தையும்மரணத்தையும்சந்திக்கநேரிடும்.

**உலகளாவிய அளவில் எதிர்ப்பு உண்டானாலும் இரட்சிக்கப்படவும், உண்மை யுள்ளவர்களாக விளங்கவும் ஒரே வழி என்ன? மத்தேயு 24:13.**

'வேதாகமத்தின் சத்தியங்களால் தங்கள் இருதயங்களைப் பாதுகாப்பவர் கள் தவிர வேறு எவரும் அந்த இறுதி பெரும் யுத்தத்தில் நிலைநிற்கமுடியாது.' - *EGW, GC, p 593.* அதாவது, வேதாகமத்தின் சத்தியங்களால் தங்கள் இருதயங் களைப் பாதுகாக்கிற எவரும் கடைசிக்கால வஞ்சகங்களால் வழிவிலகிப் போவதில்லை. தற்கால சத்தியத்தில் அவர்கள் உறுதியாக நிற்கவேண்டும்; இல்லையேல், வஞ்சகங்களில் அவர்கள் விழுந்துபோவார்கள்.

**தேவனில் உண்மையுள்ளவர்களாக நிலைத்திருப்பதற்கு வேறு எதுவும் முக்கிய மாகும்? மத்தேயு 7:24-27.**

தேவனுடைய வார்த்தைகளை அறிவுப்பூர்வமாக அறிந்திருப்பது முக்கியம்தான்; ஆனால் உபத்திரவங்கள்மத்தியில் விசுவாசத்தில் நிலைத்திருப் பதற்கு அதுமாத்திரம் போதாதென்று இயேசு சொல்கிறார். நாம் கற்றதைச் செயலில் காட்டவேண்டும்; அதாவது, இயேசுவைக்குறித்த சத்தியத்திற்குக் கீழ்ப்படியவேண்டும். மேலுள்ள உவமையில், கட்டினவர்கள் இருவருமே இயேசு சொல்லியவற்றைக் கேட்டிருந்தவர்கள்தாம். ஆனால், இயேசு சொன்ன படி செய்தவர் நிலைத்திருந்தார்; செய்யாதவர் அழிந்துபோனார்.

கீழ்ப்படிகிறவர் நிலைத்திருப்பதற்கும், கீழ்ப்படியாதவர் விழுந்துபோவதற்கும் காரணம் என்ன? ஒருவர் விசுவாசத்தில் உறுதியாக நிற்பதற்கு, கீழ்ப்படிதல் எப்படிப்பட்ட உதவிசெய்கிறது?

## செவ்வாய், மே 15

## "பாழாக்குகிற அருவருப்பு"

கடைசிக்காலம்பற்றி கிறிஸ்து பேசினபோது, **'பாழாக்குகிற அருவருப்பு'** பற்றிப் சொன்னார்; தானியேல் சொல்கிற ஓர் உருவகம் இது. தானி 9:27; 11:31; 12:11.

தேவனுடைய பிரமாணத்தை முற்றிலும் மீறின சமயங்களில்தான் அதை **'அருவருப்பு'** என்று தேவன் சொல்லியிருக்கிறார்; உதாரணமாக, விக்கிரகவழிபாடு உபா 27:15. ஒழுக்கக்கேடான பாலியல் நடை முறைகள். லேவி 18:22. எனவே, **'பாழாக்குகிற அருவருப்பு'** என்பது தேவதுரோகச் செயலைச் சுட்டிக்காட்டுகிறது.

**'பாழாக்குகிற அருவருப்பு' என்று இயேசு எதைக் குறிப்பிடுகிறார்? மத் 24:15; லூக்கா 21:20.**

கி.பி. 70இல் எருசலேமுக்கு வரவிருந்த பேரழிவை இயேசு குறிப்பிட்டார்; இது அந்த இரு வசனங்களிலிருந்தும் தெளிவாகிறது. அப்போது அஞ்ஞான ரோமானது அந்நகரத்தையும் பரிசுத்த தேவாலயத்தையும் அழித்துப்போட்டது.

ஆனாலும், எருசலேமின் அழிவு போன்று உடனே நிகழவிருந்த நிகழ்வுகள், எதிர்காலத்தில் நிகழவிருக்கும் கடைசிக்கால நிகழ்வுகளையும் அடையாளமாகச் சுட்டிக்காட்டுகின்றன; எனவே, இரண்டாவது ஒரு நிறைவேறுதலும் இருக்கிறது. 'உலகம் அவநம்பிக்கையாலும் கலகத்தாலும் கடினப்பட்டு, தேவனுடைய தண்டனைதீர்ப்புகளைப் பெற விரைந்துகொண்டிருப்பதற்கு ஓர் அடையாளமாக எருசலேம் இருப்பதை கிறிஸ்து கண்டார்.' - *EGW, GC, p 22.*

'பாழாக்குகிற அருவருப்பு' என்பது, ரோம சாம்ராஜ்யத்தின் கடைசியில் எழும்பினது. போப்புமார்க்க காலத்தோடு சம்பந்தப்படுத்தி தானி 12:11உம் தானி 11:31உம் சொல்கின்றன. இரட்சிக்கப்படவும், பரிந்துபேசவும் மாற்றுவழி அறிமுகமான காலக்கட்டம் அது; கிறிஸ்து நமக்காகச் செய்திருப்பதையும், இப்போது பரலோகப் பரிசுத்தஸ்தலத்தில் நமக்காகச் செய்துகொண்டிருப்பதையும் நயவஞ்சகமாக அபகரிக்க முயலும் மார்க்கம் அது.

இந்நிகழ்வுகளின் வரலாற்றுப் பின்னணியை அறிந்துகொள்ள, தானியேல் 8:9-12 உதவுகிறது. இரண்டு காலக்கட்ட ரோம வல்லமை இங்குக் காட்டப்படுகிறது. **முதல் காலக் கட்டம்**: தெற்கும்-கிழக்குமாக சிறிய கொம்பு வேகமாகப் பரவிய காலக்கட்டம். தானி 8:9. பரந்து விரிந்த ரோம சாம்ராஜ்யத்தை இது சுட்டிக்காட்டுகிறது. **இரண்டாவது காலக்கட்டம்**: இந்தச் சின்ன கொம்பு மேல்நோக்கி வேகமாக வளருகிறது. தானி 8:10-12. நட்சத்திரங்களில் சிலவற்றை கீழே விழப்பண்ணுகிறது. (தேவபிள்ளைகளை உபத்திரவப்படுத்துதல்.) அது 'சேனையினுடைய அதிபதியாகிய' இயேசு பரியந்தமும் தன்னை உயர்த்துகிறது. தானி 8:11. இது போப்புமார்க்க காலத்தைக் குறிக்கிறது. அஞ்ஞான ரோம சாம்ராஜ்யம் வீழ்ந்தபோதிலும், அதிலிருந்து எழுந்த போப்பு மார்க்கம், இன்றும் ரோமாக இருக்கிறது. அதனால்தான், சின்னகொம்பு என்கிற ஒரே அடையாளம் இரண்டு காலக்கட்டத்தையும் சுட்டிக்காட்டுகிறது. தானி 7:9,10 சொல்கிற நியாயத்தீர்ப்பும், தானியேல் 8:14 சொல்கிற பரிசுத்த ஸ்தல சுத்திகரிப்பும், மத்தேயு 24:29 சொல்கிற வான அடையாளங்களும் கடைசி நாட்களில் தேவன் தம் பிள்ளைகளுக்காகத் தலையிடுவதைச் சுட்டிக்காட்டுகின்றன.

## பத்துக் கன்னிகைகள்

மத்தேயு 24இல் தம் வருகைக்கான அடையாளங்களைச் சொல்லிவிட்டு, மத்தேயு 25இல் அதற்கு ஆயத்தமாவதற்கான வழிகளை இயேசு சொன்னார்.

**இயேசுவின் வருகைக்காக நாம் ஆயத்தப்படுவதற்கு அவர் மத்தேயு 25:1–13இல் வலியுறுத்தும் விஷயங்கள் எவ்வாறு நமக்கு உதவக்கூடும்?**

'கன்னிகைகள்' என்கிற வார்த்தை, கிறிஸ்தவர்களென தங்களை அழைப்போரைச் சுட்டிக்காட்டுகிறது. மாபெரும் போராட்டத்தில் சாத்தான் பக்கம் இல்லாதவர்கள். 'பரலோகராஜ்யம்' என்று அவர்களைக் குறிப்பிட்டார். மத் 25:1. ஆனால், கடைசி நேரத்தில் அவர்கள் அனைவரும் தூங்கிவிட்டார்கள். மத் 25:5. தாம் வருகிற வேளையை எதிர்பார்த்து விழித்திருக்கும்படி ஏற்கனவே இயேசு எச்சரித்திருந்தார். மத்தேயு 24:42.

பத்துக்கன்னிகைகளும் தீவட்டி வைத்திருந்தார்கள்; எல்லாருமே மணவாளனைச் சந்திக்கப் புறப்பட்டுச் சென்றார்கள். அப்படியானால் அவர்கள் எல்லாருமே மணவாளன் வருகைக்காகக் காத்திருந்தவர்கள். தாமதமானதால், எதிர்பார்த்து நம்பிக்கையோடிருந்தவர்கள் தூங்கிவிட்டார்கள். திடீரென, 'மணவாளன் வருகிறார்' என்கிற சத்தம்கேட்டு எல்லாரும் விழித்தார்கள்.

புத்தியில்லாத கன்னிகைகள் ஆயத்தமாக இல்லை; திகைத்தார்கள். ஏன்? 'எங்கள் தீவட்டிகள் அணைந்து போய்விட்டன' என்று அவர்கள் சொன்னதாக சில ஆங்கில மொழிபெயர்ப்புகளில் உள்ளது. மத்தேயு 25:8. மூல மொழியான கிரேக்க மொழியில் 'அணைந்து போகின்றன' என்று சொன்னதாக உள்ளது. அதாவது, தீவட்டிகள் அணையப்போகும் நிலையில் எரிந்துகொண்டிருந்தன. ஏதோ கொஞ்சம் எண்ணெய் இருந்தது; ஆனால், போதுமான எண்ணெய் இல்லை. அப்படியானால் பிரச்சனை என்ன?

கிறிஸ்து வரப்போகிறார் என்று அறிந்தும், அவரோடு மேலோட்டமான தொடர்பு வைத்திருப்பவர்களை இந்தக் கன்னிகைகள் சுட்டிக்காட்டுகிறார்கள். அவர்களிடம் கொஞ்சம் எண்ணெய் இருக்கிறது; அதாவது, ஆவியானவரின் கிரியை வாழ்க்கையில் கொஞ்சம் காணப்படுகிறது; விளக்கோ அணைந்து போகும் நிலையில் மின்னுகிறது. தங்கள் தேவை அதிகமாயிருந்தும், இருப்பது போதும் என்று திருப்தியாக இருக்கிறார்கள்.

'ஒருவருடைய ஆசையைப் பொறுத்து அவர் இருதயத்தில் ஆவியானவர் கிரியைசெய்து, புதிய தன்மையை உள்ளே உருவாக்குகிறார்; ஆனால் புத்தியில்லாத கன்னிகைகள் சுட்டிக்காட்டிய மக்கள் மேலோட்டமான கிரியையோடு மனநிறைவு அடைகிறார்கள். அவர்கள் தேவனை அறியாதவர்கள். அவர் குணத்தை ஆராயாதவர்கள்; அவரோடு பேசிப்பழகாதவர்கள்; அதனால் அவரை நம்புவதையும், அவருக்காக எதிர்பார்த்து, வாழ்வதையும் அறியாதவர்கள். அவர்கள் தேவனைச்சேவிப்பது வெறும்சடங்காகக்குறுகிப்போகிறது.'

இந்தக் கன்னிகைகள் செய்த அதே தவறுகளை நாமும் செய்யாமலிருக்க, நம்மை எவ்வாறெல்லாம் ஆராய்ந்து பார்க்கலாம்? அதே தவறுகள் நம்மிடம் காணப்பட்டால், எவ்வாறு நம்மை மாற்றிக்கொள்ளலாம்?

**வியாழன், மே 17**

## உங்கள் தாலந்துகளைப் பயன்படுத்துதல்

**நம் தாலந்துகளைப் பயன்படுத்துவது கிறிஸ்துவின் வருகைக்காக நம்மை ஆயத்தப்படுத்துவதில் என்ன பங்கு வகிக்கிறது?**

முந்தின உவமையைவிட வித்தியாசமான ஓர் உவமையை இயேசு இங்குச் சொல்கிறார்; ஆனால், இரண்டுமே கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தப்படுவதுபற்றித்தான் பேசுகின்றன. ஆயத்தமாக இருந்தவர்கள், ஆயத்தமாக இல்லாதவர்கள்பற்றி இரண்டும் சொல்கின்றன. இரண்டிலும் ஆவிக்குரிய நிலையில் அசட்டையாக இருந்தவர்கள் நித்திய அழிவைச் சந்தித்தார்கள்.

பத்துக்கன்னிகைகள்பற்றிய உவமையில், எண்ணெய் என்பது பரிசுத்த ஆவியானவரைச் சுட்டிக்காட்டுவதுபோல, 'பை நிறைய பணம்' என்பது (மத் 25:15; எளிய மொழிபெயர்ப்பு) தாலந்துகளைச் சுட்டிக்காட்டுகிறது. இதற்கான கிரேக்க வார்த்தை **டேலண்டா**. 'ஆவியானவரின் விசேஷித்த வரங்களையும், இயல்பாகவே நமக்குள்ள திறமைகளையும் சேர்த்து, தாலந்துகள் என்கிறோம்.'

ஊழியக்காரர்கள் அனைவருக்கும் எஜமான் தாலந்துகளைக் கொடுத்தார். அந்தத் தாலந்துகள் எஜமானுக்குச் சொந்தமானவை என்பதையும் கவனிக்க வேண்டும். மத்தேயு 25:14. '**அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக**' ஒவ்வொருவனிடமும் தாலந்துகளைக் கொடுத்தார். மத்தேயு 25:15. தங்களுக்குச் சொந்தமல்லாத பொருள்களுக்கு அந்த ஊழியக்காரர்கள் உக்கிராணக்காரர்களாக இருந்தார்கள்; எனவே அவற்றுக்குப் பொறுப்பாளிகளாகவும் இருந்தார்கள். அதனால்தான் எஜமான் திரும்பிவந்ததும், 'அவர்களிடம் கணக்குக் கேட்டான்.' மத்தேயு 25:19.

ஆவிக்குரிய வரங்களைத் தருகிறவர் ஆவியானவர். 1கொரி 12:1-11, 28-31; எபே 4:11. தங்களிடம் எந்த வரமும் இல்லை என்று நினைப்பவர்களுக்கு இது ஒரு நற்செய்தி. கொடுப்பவர் இல்லாமல் வரங்களும் இல்லை. எனவே, மிகப்பெரிய ஈவாகிய ஆவியானவரைப் பெற்றுக்கொண்டுதான் இவர்கள் தங்களுக்குரிய தாலந்துகளைப் பெற்றார்கள்.

நமக்கான வரங்கள் கிறிஸ்துவிடம் ஆயத்தமாக இருக்கின்றன. ஆனால் ஆவியானவரைநாம்பெற்றுக்கொண்டு, அவரிடம்நம்மை அர்ப்பணித்தால்தான், அந்த வரங்களைச் சொந்தமாக்கமுடியும். பொல்லாத ஊழியக்காரன் இந்த விஷயத்தில்தான் தவறுசெய்தான். அவனுக்கு ஒரு வரம் கொடுக்கப்பட்டது; அவன் அதை ஒன்றுமே செய்யாமல் வைத்திருந்தான். தன் தாலந்தை அவன் மேம்படுத்தவில்லை. கிருபையாக தனக்கு அவர் தந்ததை எடுத்து, ஏதாவது செய்ய, அவன் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அதனால்தான் இயேசு அவன் 'பொல்லாதவனும் சோம்பலுமானவன்' என்று கடுமையாகப் பேசினார். மத் 25:26.

கடைசிக்காலத்தையும், தம்முடைய வருகையையும்பற்றிப் பேசும்போது இயேசு இந்த உவமையைச் சொன்னார். அப்படியானால், நம்முடைய தாலந்துகளை நாம் பயன்படுத்துவது, கடைசி நாட்களுக்கு நம்மை ஆயத்தப்படுத்துவதில் எவ்வாறு முக்கியப் பங்காற்றுகிறது?

## மேலும் படிக்க:

“ஒரு தாலந்தைப் பெற்றவன்‘போய், நிலத்தைத் தோண்டி, தன் எஜமானுடைய பணத்தைப் புதைத்து வைத்தான்.’

“ஒரு தாலந்தைப் பெற்றவன், தான் பெற்றதைப் பெரிதாக நினைக்கவில்லை. பெரிதாக என்னிடம் தாலந்து எதுவும் இல்லை என்று நினைத்து, கிறிஸ்துவுக்காகச் சேவைசெய்யாமல் இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் எச்சரிப்பு இது. ஏதாவது பெரிய வேலையைச் செய்யச் சொல்லியிருந்தால், எவ்வளவு சந்தோஷமாக முயற்சியில் இறங்கியிருப்பார்கள்! சிறுசிறு வேலைகளைச் செய்யக்கூடியவர்களாக அவர்கள் இருப்பதாலேயே, தாங்கள் எதுவும் செய்யத் தேவையில்லையென நினைத்து, நியாயப்படுத்துகிறார்கள். இதில் தவறுசெய்கிறார்கள். ஆண்டவர் வரங்களைப் பகிர்ந்தளிப்பது நம் குணத்தைச் சோதிக்கிற ஒன்றாகும். தன் தாலந்தைப் பயன்படுத்த மறுத்தவன், உண்மையற்ற ஊழியக்காரனெனக் காட்டிவிட்டான். அவனிடம் ஐந்து தாலந்துகள் தந்திருந்தாலும், ஒரு தாலந்தைப் புதைத்துவைத்ததுபோலவே புதைத்திருப்பான். ஒரு தாலந்தை அவன் அற்பமாக எண்ணியதால், பரலோக வரங்களை அவன் புறக்கணித்தது தெரிகிறது.

“**கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாய் இருக்கிறான்.** சிறியவை என்பதால் சிறுசிறு விஷயங்களைக் குறைவாக மதிப்பிடுகிறார்கள்; ஆனால், வாழ்க்கையைச் சீர்ப்படுத்துவதில் அவை பெரும் பங்காற்றுகின்றன. கிறிஸ்தவ வாழ்க்கையில் முக்கியமற்றவை என்று எதுவும் இல்லை. சிறுசிறு விஷயங்களின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டால், நம் குணங்கள் சீர்ப்படுவதில் பெரும் சீர்கேட்டைச் சந்திக்கவேண்டியிருக்கும்.’ – *EGW, COL, p 355,356.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *பூமியை சொர்க்கபுரியாக மாற்றுவதற்கு, மக்கள் வகுத்த சில சித்தாந்தங்கள்பற்றிச் சொல்லுங்கள். அவற்றில் ஒன்றுகூட வெற்றியாக அமையவில்லை. ஏன்?*

2. *தேவன் சொல்கிறபடி செய்யும்போது, நம் விசுவாசம் எவ்வாறு பெலப்படுகிறது? அதாவது, கிரியையில்லாத விசுவாசம் எவ்வாறு ‘செத்ததாக’ இருக்கிறது? யாக் 2:26. ‘தேவனுடைய கற்பனைகளைக்’ கைக்கொள்கிறவர்களுக்கு (வெளி 14:12) உபத்திரவங்கள் வருமாம். அவை நினையாத நேரத்தில் வரப்போவதால், இப்போதே அதற்கு நம்மை ஆயத்தப்படுத்துவது ஏன் அவசியம்?*

3. *அந்த உவமையில், மேலோட்டமாகப் பார்த்தால், பத்துபேருமே கன்னிகைகள்தாம்; செயல்பட்டதும் ஒன்றுபோல்தான்; அப்படியானால், அந்தச் சம்பவம் எவ்வாறு நமக்கு ஓர் எச்சரிப்பாக இருக்கிறது? புத்தியில்லாத கன்னிகைகள்போல நம்மை நாமே வஞ்சித்துவிடாமல் இருக்க, நாம் என்ன செய்யலாம்?*

4. *கூடுமானால், ‘தெரிந்துகொள்ளப்பட்டவர்களும்’ வஞ்சிக்கப்படுவார்கள் என்றால் என்ன அர்த்தம்? ‘தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்’ என்றால் யார்? மத்தேயு 24:31; ரோமர் 8:33; கொலோ 3:12. அப்படியானால் வஞ்சகங்கள் எவ்வளவு கொடியவை என்பதுபற்றி என்ன புரிகிறது?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள்.

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*